**FIRST INFORMATION REPORT**
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM I
8074733
C

1. District மாவட்டம்: Tiruvannamalai | PS காவல்நிலையம்: V&AC | Year ஆண்டு: 2023 | FIR No முதஅ எண்: 09/2023 | Date நாள்: 25.08.2023

2. (i) Act சட்டம்: Indian Penal Code — Sections பிரிவுகள்: 120(B), 463, 464, 474, 406

(ii) Act சட்டம்: The Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 13 (2) r/w 13(1) (c) & (d)

(iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும்: 2018 to 2021

3. (a) Occurrence of Offence Day குற்ற நிகழ்வு நாள்: — Date from : நாள் முதல்: - — Date to : நாள் வரை: -

Time Period நேர அளவு: — Time from : நேரம் முதல்: — Time to : நேரம் வரை:

(b) Information Received at PS Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 25.08.2023 — Time நேரம்: 1310 Hrs

(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்: Vol - III — Time நேரம்: 1310 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக: Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: 40 Kms West

Beat Number : முறைக் காவல் எண்: — (b) Address முகவரி: AD Welfare Office, Chengam, Tiruvannamalai District.

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயா — District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: Tmt.G.Mythily — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர்: D/o Gopinathan

(c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு: Age-42 — (d) Nationality : நாட்டினம்: Indian — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:

Date of Issue : வழங்கப்பட்ட நாள்: — Place of Issue : வழங்கப்பட்ட இடம்:

(f) Occupation தொழில்: Inspector of Police — (g) Address முகவரி: Vigilance and Anti-Corruption, Tiruvannamalai

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

**Ao-1 Tr.P.Ramesh, formerly Special Tahsildar, ADW, Chengam, Tiruvannamalai District and 16 others Chengam taluk, Tiruvannamalai District.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant: ---
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

------

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

------

11. Inquest Report / Un-natural death Case No if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சாராம்சம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

நான் இன்று 25.08.2023 தேதி 1310 மணிக்கு அலுவலகத்தில் பணியில் இருந்த போது தபால் மூலம் கிடைக்கப்பெற்ற ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்ககம் சென்னை உத்திரவுப்படி பதிவு செய்த வழக்கின் விவரம் பின்வருமாறு: திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும் மாவட்ட நிர்வாக நடுவர் திரு.பா.முருகேஷ், இ.ஆ.ப., அவர்களின் நேர்முக கடித எண்.அ1/6646/2020-4இ நாள்:21.10.2021—அறிக்கையின்படி, பொருள்: பொதுப்பணிகள் திருவண்ணாமலை மாவட்டம் செங்கம் வட்டம் செங்கம், தனி வட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலம் அலுவலகத்தில் முறைகேடுகள் நடைபெற்றது சம்பந்தப்பட்ட நபர்கள் மீது காவல் துறையின் மூலம் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள கோருதல் - தொடர்பாக. பார்வை: 1.ஆணையர்,

-இதன் தொடர்ச்சி தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed Tr. S. VELMURUGAN ........ DSP ... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ........................ நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ................................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

25.8.2023

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25.08.2023 at 14.30 hrs.

Name: பெயர் G. MYTHILY
Rank: நிலை Inspector No. எண் of Police
VSAC. TVM.

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p 2

ஆதிதிராவிடர் நலத்துறை, சேப்பாக்கம், சென்னை, ஆணையரின் நேர்முக கடித எண் ஐ2/22509/2020, நாள் - 13.10.2021. 2.தொடர்புடைய ஆவணங்கள். திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் ஆதிதிராவிடர் நல அலுவலகத்தில் தனி வட்டாட்சியராக பணிபுரிந்த முன்னாள் தனி வட்டாட்சியர் திரு.பொ.ரமேஷ் தற்போது வட்டாட்சியர், ஜமுனாமரத்தூர் வட்டம், திருவண்ணாமலை மாவட்டம்) என்பவர் மலைப்படி நிலுவைத்தொகை மற்றும் இதர நிலுவைத்தொகை போன்ற இனங்களில், போலியாக பட்டியல் தயார் செய்து வேறு நபர்கள் வங்கி கணக்கிற்கு பற்று வைக்கப்பட்டுள்ளதாக வரப்பெற்ற புகார் தொடர்பாக சென்னை, ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலகத்திலிருந்து இணை இயக்குநர்(பொது) ஆணையரின் நேர்முக உதவியாளர் ஆகியோரின் தலைமையிலான ஆய்வுக்குழு 07.10.2021 மற்றும் 08.10.2021 ஆகிய தேதிகளில் திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் மற்றும் போளூர் தனிவட்டாட்சியர் ஆதிதிராவிடர் நலம்) அலுவலகத்திற்கு நேரில் சென்று மேற்காணும் முறைகேடுகள் தொடர்புடைய அனைத்து அசல் ஆவணங்களையும் ஆய்வு செய்யப்பட்டது என்றும், மேற்கண்ட ஆய்வின்படி முறைகேடுகளில் ஈடுபட்டு அதிக அளவிலான அரசு பணத்தை போலி பட்டியல்கள் மூலம் கையாடல் செய்ய கூட்டுசதி செய்த கீழ்கண்ட நபர்கள் மற்றும் தொடர்புடைய அனைத்து அலுவர்கள் மீதும் துறை ரீதியான ஒழுங்கு நடவடிக்கையும் மற்றும் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறையினரால் குற்றவியல் வழக்கு தொடர நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பார்வை 1-ல் காணும் சென்னை, சேப்பாக்கம், ஆதிதிராவிடர் நலத்துறை, ஆணையரின் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னை, ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலக ஆய்வுக் குழுவின் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அடிப்படையில் மேற்குறிப்பிட்ட முறைகேடுகளுக்கு மூல காரணமாக இருந்து கூட்டுசதியில் ஈடுபட்ட நபர்களின் விவரம்.

செங்கம் தனிவட்டாட்சியராக (ஆதிந) திரு.பொ.ரமேஷ் (A-1) என்பவர் 01.05.2018 முதல் 28.08.2020 வரை பணிபுரிந்த காலத்தில் தனது அலுவலகத்தில் பணிபுரிந்த இளநிலை உதவியாளர் திரு.மணிகண்டன் (A-2) (பணிபுரிந்த காலம்: 2012 முதல் 31.05.2021 வரை) உதவியுடன் தனது கட்டுப்பாட்டில் இருந்த ஊர் கவுண்டனூர் அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் திருமதி.ஆர்.கீதா என்பவருக்கும், கீழ்வலசை அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி இரவுக்காவலர் திரு.ஜே.டேனியல் என்பவருக்கும், ஊர்கவுண்டனூர் அரசு உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி சமையலர் திரு.D.சதீஷ்குமார் என்பவருக்கும், போளூர் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதி சமையலர் திரு.சிவக்குமார் என்பவருக்கும் மற்றும் இரவுக்காவலர் திரு.எஸ்.சிவராமன் ஆகியோர்களுக்கு மலைப்படி நிலுவைத்தொகை மற்றும் இதர நிலுவைத்தொகை போன்ற இனங்களில் போலியாக பட்டியல் தயார் செய்தும், உதவி கருவூல அலுவலர் திரு.சரவணன் அவர்களின் உதவியுடன் அரசு பணத்தினை வேறு நபர்கள் வங்கி கணக்கிற்கு பற்று வைத்து கையாடல் செய்து ஆவணங்களை மறைத்துள்ளார்.

செங்கம் தனிவட்டாட்சியராக (ஆதிந) திரு.ஆர்.சுப்பிரமணியன் (A-3) என்பவர் 09.10.2020 முதல் நாளது வரை பணிபுரிந்த காலத்தில் தனது அலுவலகத்திலதத்தில் 11.02.2021 முதல் பணிபுரிந்து வரும் முதுநிலை வருவாய் ஆய்வாளர் திரு.பொ.சதீஸ்குமார் அவர்களின் உதவியுடன் தனது கட்டுப்பாட்டில் இருந்த நிர்வல்லை அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளி இரவுக்காவலர திரு.ஜே.டேனியல் என்பவருக்கும், ஊர்கவுண்டனூர் அரசு உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளி சமையலர் திரு.D.சதீஷ்குமார் என்பவருககும், புதுப்பாளையம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியில் இரவுக்காவலராக பணிபுரிந்த திருமதி.D.எடித் எஸ்தர் என்பவருக்கும், புதுப்பாளையம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியில் சமையலராக பணிபுரிந்த திருமதி.ப.சுதாகறபகம் சமையலர் என்பவருக்கும், ஊர்கவுண்டனூர் அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் இரவுக்காவலராக திரு.வி.சின்னராஜ் என்பவருக்கும், கீழ்சிலம்படி அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்த திருமதி. E.அஞ்சலிதேவி என்பவருக்கும், துரிஞ்சாபுரம் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் இரவுக்காவலராக பணிபுரிந்த திரு.ஏ.நடராஜன் என்பவருக்கும் மற்றும் புதுப்பாளையம் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் சமையலராக பணிபுரிந்த திரு. கே. வள்ளிமுத்து ஆகியோர்களுக்கு மலைப்படி நிலுவைத்தொகை மற்றும் இதர நிலுவைத்தொகை போன்ற இனங்களில் தகுதியில்லாத நபர்களுக்கு மலைப்படி வழங்கியும் போலியாக பட்டியல் தயார் செய்தும், உதவி கருவூல அலுவலர் திரு.சரவணன் (A-4) அவர்களின் உதவியுடன் அரசு பணத்தினை வேறு நபர்கள் வங்கி கணக்கிற்கு பற்று வைத்து கையாடல் செய்து ஆவணங்களை மறைத்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், ஊர் கவுண்டனூர் அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் திருமதி.ஆர்.கீதா (A-5) என்பவர் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வந்த போது 10.08.2010 முதல் 16.02.2020 வரை உள்ள காலத்திற்கு மலைப்படி வழங்கவில்லை என செங்கம் தனிவட்டாட்சியர்(ஆதிந) திரு.பொ.இரமேஷ் என்பவரால் கொடுபடாச் சான்று வழங்கப்பட்டத்தின் அடிப்படையில், தனியருக்கு மலைப்படி நிலுவைத்தொகையான ரூ.2,74,442/-யினை போளூர் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண்.அ1/35/2021, நாள்.29.01.2021-ன்படி வழங்க ஆணையிடப்பட்டு பணம் எடுக்கப்பட்டுள்ளது. மேலும் கடந்த 01.06.1996 முதல் 30.09.2017 வரை மலைப்பகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி நிலுவைத் தொகையான ரூ.1,85,743/-யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண்.321/அ/2021, நாள்.30.07.2021-ன்படி மீண்டும் வழங்க ஆணையிடப்பட்டு திருமதி.கீதா மூன்று முறை மலைப்படி பெற்று வழங்கப்பட்டுள்ளது. மேலும் தனியருக்கு அவரது சம்பளத்திலேயே மாதம் ரூ.6000/- மலைப்படியாக வழங்கப்பட்டுள்ளது என அவரது நவம்பர்-2018 ஊதிய சான்றின் மூலம் தெரிய வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கீழ்வலசை, அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் இரவுக்காவலராக பணிபுரிந்த திரு.ஜே.டேனியல் (A-6) என்பவர் 2013ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை செங்கம் தனிவட்டாட்சியர்(ஆதிந) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் பிற அரசு அலுவலர்களின் பெயரில் GPF/ EL Surrender / HBA advance / selection grade and special grade fixation arrear / Hills allowance arrear போன்ற பட்டியலினை தயார் செய்து, அவரது SBI வங்கி கணக்கு எண்.11287064341-இல் (MICR No.606002010) முறைகேடாக பல லட்சம் ரூபாய் பற்று வைக்கப்பட்டுள்ளது. மேலும் 01.01.2002 முதல் 31.12.2016 வரை மலைப்பகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி நிலுவைத்தொகையான ரூ.2,31,300/- யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள்படி வழங்க ஆணையிடப்பட்டு பணத்தை எடுத்துள்ளார், தனியரது நவம்பர் 2018 சம்பள சான்றில் அவருக்கு மலைப்படி அவரது சம்பளத்திலேயே பெற்று வழங்கப்பட்டுள்ளது. மேலும், திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், செங்கம் தனிவட்டாட்சியர்(ஆதிந) அவர்களின் செயல்முறைகள் எண்.அ/1191/2020, நாள்.14.10.2020-ன்படி திரு.எம்.தருமன் என்பவருக்கு ஒப்பளிக்கப்பட்ட பொது வருங்கால வைப்பு நிதியிலிருந்து தற்காலிக முன்பணம் ரூ.96,500/- பெற திரு.தருமன் என்பவருடைய பெயரில் பட்டியல் தயார் செய்யப்பட்டு, அந்த தொகையினை திரு.ஜே.டேனியல் என்பவரின் SBI வங்கி கணக்கு எண்.11287064341-இல் (MICR No.606002010) பணம் பற்று வைத்து கையாடல் புரிந்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், புதுப்பாளையம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியில் இரவுக்காவலராக பணிபுரிந்த திருமதி.D.எடித் எஸ்தர் (A-7) என்பவர் 2019ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை செங்கம் தனிவட்டாட்சியர் (ஆதிந) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் பிற அரசு அலுவலர்களின் பெயரில் GPF/ EL Surrender / HBA advance / selection grade and special grade fixation arrear / Hills allowance arrear போன்ற பட்டியலினை தயார் செய்து, அவரது வங்கி கணக்கு எண்.11287064352-இல் (MICR No.606002010) முறைகேடாக பல லட்சம் ரூபாய் பற்று வைத்து கையாடல் புரிந்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், ஊர்கவுண்டனூர், அரசு உண்டு உறைவிட நடுநிலைப்பள்ளியில் சமையலராக பணிபுரிந்த திரு.D.சதீஷ்குமார் (A-8) என்பவர் 2019-ம் ஆண்டு முதல் செங்கம் தனிவட்டாட்சியர்(ஆதிந) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் பிற அரசு அலுவலர்களின் பெயரில் GPF/ EL surrender / HBA advance / selection grade

and special grade fixation arrear / Hills allowance arrear போன்ற பட்டியலினை தயார் செய்து, அவரது வங்கி கணக்கு எண்.3550061576-இல் (MICR No.606002010) முறைகேடாக பல லட்சம் ரூபாய் பற்று வைத்துள்ளார். மேலும் கடந்த 01.01.2016 முதல் 31.12.2018 வரை மலைப்பகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி தொகையான ரூ.92,100/-யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண்.282/2021/ஆ, நாள்.27.07.2021-ன்படி வழங்க ஆணையிடப்பட்டு, அவரது வங்கி கணக்கிற்கு வரவு வைத்து கையாடல் புரிந்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், கீழ்தட்டியாப்பட்டு, அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் இரவுக்காவலராக பணிபுரிந்து 30.04.2020 அன்று பணி ஓய்வு பெற்ற திரு.பள்ளிகூடத்தான் (A-9) என்பவர் பணி ஓய்வு பெற்ற பின்னரும் செங்கம் தனிவட்டாட்சியர்(ஆதிந) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் பிற அரசு அலுவலர்களின் பெயரில் GPF/ EL surrender / HBA advance / selection grade and special grade fixation arrear / Hills allowance arrear போன்ற பட்டியலினை தயார் செய்து, அவரது வங்கி கணக்கு எண்.11287071256-இல் (MICR No.606002010) முறைகேடாக பல லட்சம் ரூபாய் பற்று வைத்து கையாடல் புரிந்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் சமையலராக பணிபுரிந்து வரும் திரு. சிவக்குமார் (A-10) என்பவர் 25.02.2021 அன்று தான் பணியில் சேர்ந்துள்ளார். இவர் திரு.பள்ளிகூடத்தான் இரவுக்காவலர் (பணி ஓய்வு) என்பவரின் மகன் ஆவார். மேற்கண்ட நபர் அரசு பணியில் சேர்வதற்கு முன்னரே, செங்கம் தனிவட்டாட்சியர் (ஆதிந) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் பிற அரசு அலுவலர்களின் பெயரில் GPF/ EL surrender / HBA advance / selection grade and special grade fixation arrear / Hills allowance arrear போன்ற பட்டியலினை தயார் செய்து, மேற்படி திரு. சிவக்குமார் என்பவரின் வங்கி கணக்கு எண்.11287053157-இல் (MICR No.606002010) முறைகேடாக பல லட்சம் ரூபாய் பற்று வைத்து மோசடி செய்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம் புதுப்பாளையம், அரசு ஆதிதிராவிடர் நல மாணவியர் விடுதியில் சமையலராக பணிபுரிந்து வரும் திருமதி.ப.சுதாகற்பகம் (A-11) சமையலர் என்பவர் திரு.பள்ளிகூடத்தான் இரவுக்காவலர் (பணிஓய்வு) என்பவரின் மனைவி ஆவார். திருமதி.ப.சுதாகற்பகம் சமையலர் என்பவர் செங்கம் தனிவட்டாட்சியர் (ஆதிந) அவர்களின் கட்டுப்பாட்டின் கீழ் பணிபுரியும் பிற அரசு அலுவலர்களின் பெயரில் GPF / EL surrender / HBA advance / selection

grade and special grade fixation arrear / Hills allowance arrear போன்ற பட்டியலினை தயார் செய்து மேற்படி திருமதி.பா.சுதாகற்பகம் என்பவரின் வங்கி கணக்கு எண். 13500655201-இல் (MICR No.606002010) முறைகேடாக பல லட்சம் ரூபாய் பற்று வைத்து மோசடி செய்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், பலாமரத்தூர் அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் இரவுக்காவலராக பணிபுரிந்து வரும் திரு.எஸ்.சிவராமன் (A-12) என்பவர் 22.01.1999 முதல் 30.09.2017 வரை மலைப்பகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி வழங்காத காரணத்தால், தனியருக்கு மலைப்படி நிலுவைத்தொகையான ரூ.1,64,738/-யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண்.273/ஆ/2021, நாள் 16.07.2021-ன்படி வழங்க ஆணையிடப்பட்டு, தனியரின் வங்கி கணக்கில் பணம் முறைகேடாக பற்று வைத்து மோசடி செய்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், ஊர்கவுண்டனூர் அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் இரவுக்காவலராக பணிபுரிந்து வரும் திரு.வி.சின்னராஜ் (A-13) என்பவர் 26.03.1990 முதல் 30.09.2017 வரை மலைப்பகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி வழங்காத காரணத்தால், தனியருக்கு மலைப்படி நிலுவைத்தொகையான ரூ.1,99,254/-யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண்.330/ஆ/2021-ன்படி வழங்க ஆணையிடப்பட்டு, தனியரின் வங்கி கணக்கில் பணம் முறைகேடாக பற்று வைத்து கையாடல் புரிந்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், கீழ்சிலம்படி அரசு உண்டு உறைவிட தொடக்கப்பள்ளியில் தலைமை ஆசிரியராக பணிபுரிந்து வரும் திருமதி. E.அஞ்சலாதேவி (A-14) என்பவர் 07.10.1991 முதல் 30.09.2017 வரை மலைப்பகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி வழங்காத காரணத்தால் தனியருக்கு மலைப்படி நிலுவைத்தொகையான ரூ.1,90,504/-யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண்.332/ஆ2021, நாள் 30.07.2021- ன்படி வழங்க ஆணையிடப்பட்டு தனியரின் வங்கி கணக்கில் பணம் முறைகேடாக பற்று வைத்து கையாடல் செய்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், துரிஞ்சாபுரம் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் இரவுக்காவலராக பணிபுரிந்து வரும் திரு.ஏ.நடராஜன் (A-15) (Died) என்பவர் 24.11.1983 முதல 30.09.2017 வரை மலைப்புகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி வழங்காத காரணத்தால், தனியருக்கு மலைப்படி நிலுவைத்தொகையான ரூ.2,06,958/-யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண். 245/அ/2021, நாள் 01.07.2021-ன்படி வழங்க ஆணையிடப்பட்டு தனியரின் வங்கி கணக்கில் பணம் முறைகேடாக பற்று வைத்து கையாடல் செய்துள்ளார்.

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம், புதுப்பாளையம் அரசு ஆதிதிராவிடர் நல மாணவர் விடுதியில் சமையலராக பணிபுரிந்து வரும் திரு. கே. வெள்ளிமுத்து (A-16) என்பவர் 11.03.1992 முதல் 30.09.2017 வரை மலைப்பகுதியில் பணிபுரிந்த காலத்திற்கு மலைப்படி வழங்காத காரணத்தால், தனியருக்கு மலைப்படி நிலுவைத்தொகையான ரூ.1,95,453/-யினை செங்கம் ஆதிதிராவிடர் நல தனிவட்டாட்சியர் செயல்முறைகள் எண்.234/அ/2021, நாள் 30.07.2021-ன்படி வழங்க ஆணையிடப்பட்டு தனியரின் வங்கி கணக்கில் பணம் முறைகேடாக பற்று வைத்து கையாடல் செய்துள்ளார். மேற்படி அலுவலர்களின் நவம்பர்-2018 ஊதிய சான்றின்படி அவர்களுக்கு மலைப்படி அவர்களது சம்பளத்துடனேயே வழங்கப்பட்டு மீண்டும் இரண்டாவது முறையாக போலி பட்டியல் தயார் செய்து பெற்று வழங்கப்பட்டுள்ளது.

மேலும் செங்கம் சார்நிலை கருவூல அலுவலகத்தில் உதவி கருவூல அலுவலராக பணிபுரியும் திரு.சரவணன் IFHRMS-ல் போலியான பட்டியல்களை கொண்டு பதிவேற்றம் செய்ய செங்கம் தனி வட்டாட்சியர்கள் (ஆதிந) திரு.பொ.ரமேஷ் மற்றும் திரு.ஆர்.சுப்பிரமணியன் ஆகியோர்களுக்கு உறுதுணையாக செயல்பட்டு மோசடியில் ஈடுபட்டுள்ளார்.

மேற்படி சென்னை, ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலக ஆய்வுக் குழு அறிக்கையின்படி முன்னாள் செங்கம் தனிவட்டாட்சியர் (ஆதிந திரு.பொ.ரமேஷ், தற்போது, ஜமுனாமரத்தூர் வட்டாட்சியர்) என்பவர் தனது அதிகாரத்தை தவறாக பயன்படுத்தி அவர் செங்கம் தனிவட்டாட்சியர்(ஆதிந) அலுவலகத்தில் பணியாற்றிய காலமான 01.05.2018 முதல் 28.08.2020 வரையில் உள்ள அனைத்து ஆவணங்களையும் மேற்காணும் குற்றத்தை மறைக்கும் நோக்கில் அழித்துள்ளதாகவும், மேலும் இதற்கு உடந்தையாக இளநிலை வருவாய் ஆய்வாளர் திருமணிகண்டன் என்பவர இருந்துள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும் திரு.P.சதீஷ்குமார் (A-17) முதுநிலை வருவாய் ஆய்வாளர், செங்கம் என்பவர் பள்ளிக்கூடத்தான் இரவுக்காவலர் மற்றும் சிவக்குமார் சமையலருடன் சேர்ந்து GPF/ EL surrender / HBA advance / selection grade and special grade fixation / Hills allowance போன்ற பட்டியல்களை போலியாக தயாரிக்க உடந்தையாக இருந்து அரசுப்பணத்தை கையாடல் செய்துள்ளார். எனவே, அதிகளவிலாள அரசு பணத்தை கூட்டுசதி செய்து கையாடல் செய்த மேற்குறிப்பிட்டுள்ள நபர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டு, இக்குற்ற செயல் குறித்து தங்களது துறைரீதியாக முழுமையாக விசாரணை மேற்கொண்டு அறிக்கை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் சென்னை, ஆதிதிராவிடர் நல ஆணையர் அலுவலக ஆய்வுக்குழுவின் ஆய்வறிக்கையில் திருவண்ணாமலை மாவட்டத்தில் விடுதி மாணவர்களின் உணவுக் கட்டணம் மற்றும் சில்லரை

செலவினத்தில் முறைகேடுகள் நடைபெற்றுள்ளது தொடர்பாக அரசு கடித எண்-8705/ஊ.கி.1/2021-1, நாள். 06.07.2021-ன்படி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநர் அவர்களுக்கு ஆய்வறிக்கையுடன் கடிதம் அனுப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே மேற்படி குற்ற அலுவலர்கள் மீது திருவண்ணாமலை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2023 U/s 120(B), 463, 464, 474, 406 IPC and 13 (2) r/w 13(1) (c) & (d) PC Act 1988-ன்படி 25.08.2023 தேதி 1310 மணிக்கு வழக்கு பதிவு செய்யப்பட்டது. இதன் அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதிமன்ற நடுவர்/சிறப்பு நீதிபதி திருவண்ணாமலை அவர்ளுக்கு அனுப்பியும், இதர நகல்களை சம்மந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கப்பட்டது.

25.8.2023

(G. MYTHILY)
Inspector of Police,
V & AC, Tiruvannamalai.